**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி, B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 31 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆடி மாதம் 15 ம் நாள்
**இ.ம.எண். 1/2024**
**இல்**
**அசல் வழக்கு எண். 44/2020**

பாஹிமா .. மனுதாரர்/வாதி

//எதிர்//

1. நூருன்னிசா
2. முகமது யூசுப்
3. ரிஸ்வானா பேகம் அவர் சார்பாக
அவரது பவர் ஏஜெண்ட் நூருன்னிசா ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 22.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. கார்த்திக்ராஜன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சங்கரன் , அவர்கள் ஆஜராகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று 31.07.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஏற்று உத்தரவு பிறப்பிக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவின் மனுதாரர் மற்றும் அசல் வழக்கில் வாதி ஆவார். எதிர்மனுதாரர்கள் பேரில் இறுதிநிலை தீர்ப்பாணை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் சில ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த ஆவணங்களை சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து தருவித்து தாக்கல் செய்வதில் காலதாமதமாகிவிட்டதாகவும், இது வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருந்ததில்லை என்றும், ஆவணங்கள் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஆவணங்களை ஏற்று வழக்கை மேல் நடத்த உத்தரவு வழங்கவேண்டியது

அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது எனவும், இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்றும், எனவே மேற்கண்ட ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து இத்துடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்று உத்தரவு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிருரையின் சுருக்கம்:</u>**

3. மனு சட்டப்படியும், சங்கதிகள்படியும் ஏற்புடையதல்ல. மனுதாரர் அபிடவிட்டில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையல்ல என்றும், இம்மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியது என்றும், சார் பதிவாளர் அலுவகத்தில் இருந்து தருவித்து தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்து ஏன் காலதாமதம் ஏற்பட்டது? என்ற விபரத்தை தெரிவிக்கவில்லை என்றும், பாகப்பிரிவினை பத்திரம் யார் யாருக்கு இடையே ஏற்பட்டது என்ற விபரம் தெரிவிக்கப்படவில்லை என்றும், 2 வது ஆவணம் 20.10.2003 தேதிய ஊர்ஜித விபரம் யாருக்கிடையே ஏற்பட்டது என்ற விபரம் தெரிவிக்கப்படவில்லை என்றும், 3வது ஆவணம் குறித்த விபரம் அபிடவிட்டில் தெரிவிக்கப்படவில்லை என்றும், 4 மற்றும் 5 ஆவணங்கள் கிரய சாசனம் என யார் யாருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்ற விபரம் தெரிவிக்கப்படவில்லை என்றும், எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்புடையதாக இல்லை என்றும், மனுவினை காலதாமதம் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளனர்.

4. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை இந்த மனுவை அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

**<u>தீர்வு:</u>**

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இறுதிநிலை தீர்ப்பாணை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் சில ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த ஆவணங்களை சார் பதிவாளர் அலுவலத்திலிருந்து தருவித்து தாக்கல் செய்வதில் காலதாமதமாகிவிட்டதாகவும், ஆவணங்கள் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட

காலதாமதத்தை மன்னித்து ஆவணங்களை ஏற்று வழக்கை மேல் நடத்த உத்தரவு வழங்கவேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது எனவும், இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில், சார் பதிவாளர் அலுவகத்தில் இருந்து தருவித்து தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்து ஏன் காலதாமதம் ஏற்பட்டது? என்ற விபரத்தை தெரிவிக்கவில்லை என்றும், பாகப்பிரிவினை பத்திரம் யார் யாருக்கு இடையே ஏற்பட்டது என்ற விபரம் தெரிவிக்கப்படவில்லை என்றும்,காலதாமதம் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றும் கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக இறுதிநிலை தீர்ப்பாணை கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் சில ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த ஆவணங்களை சார் பதிவாளர் அலுவலத்திலிருந்து தருவித்து தாக்கல் செய்வதில் காலதாமதமாகிவிட்டதாகவும், இது வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருந்ததில்லை என்றும், இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்றும், எனவே மேற்கண்ட ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகிறது என கூறப்பட்டுள்ளது. மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ள கூடியதாக உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. மேற்படி ஆவணங்கள் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்கள்தான். அவைகளை பொறுத்து ஆட்சேபனை எதுவும் இருக்கும் பட்சத்தில் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யும்பொழுது ஆட்சேனையை தக்கமுறையில் பதிவு செய்யலாம். இந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் பெறப்பட்டு குறியீடு செய்யப்பட்டது என்பதாலேயே அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டதாக தீர்மானம் செய்ய இயலாது. அந்த ஆவணத்தின்

உண்மை தன்மை குறித்து உரிய நேரத்தில் தீர்வு காணப்படும். மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வதால் இந்த எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பிரச்சனையோ கஷ்ட நஷ்டமோ ஏற்படாது. மாறாக, அசல் வழக்கில் ஒரு முழுமையான தீர்வு ஏற்பட உதவிகரமாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால் இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10. **முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது, செலவுத்தொகை இல்லை**.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 31.07.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

ஒப்பம் (P. கனிமொழி)

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**

**<u>இணைப்பு:</u>**

மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :இல்லை

ஒப்பம் (P. கனிமொழி)

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**